
கடந்த 21–1–2017 அன்று, தமிழக அரசு ஓர் அவசரச் சட்டத்தைப் பிறப்பித்த பிறகும்கூட, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், போராடக்கூடிய மாணவர்களை நேரில் சந்தித்து, தமிழக அரசின் சார்பில் ஜல்லிக்கட்டு நடத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளை விளக்கிச் சொல்லி, இனியும் ஜல்லிக்கட்டு தடைபடாது என்பதை அவர்களுக்கு எடுத்துரைத்திருக்க வேண்டும். ** இன்றைக்கு ஜனநாயக ரீதியில், அமைதியான அறவழியில் நடைபெற்ற அறப்போராட்டம் ** (குறுக்கீடுகள்) **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாலையில் மீண்டும் சபை கூடியபோது, என்ன பிரச்சினை குறித்து இங்கு எழுப்பினாரோ, அதே வழியில் மறுபடியும் திரும்ப தன்னுடைய பயணத்தைத் தொடங்கியிருக்கின்றார். மாண்புமிகு பாரதப் பிரதமரை சந்தித்து, அவசர சட்டத்தினைப் பிறப்பிக்க வேண்டும் என்பதற்காக டெல்லி செல்வதற்காகப் புறப்பட்டு, நான் கீழே வந்து விட்டேன். காரில் ஏறுவதற்கு நான் தயார் நிலையில் இருந்தபோது, அறப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்ற மாணவர்கள், இளைஞர்கள் என்னைச் சந்திக்க வேண்டும் என்று சொன்னார்கள். உடனடியாக நான் புறப்படவிருந்த விமானத்தின் பயணச் சீட்டை இரத்து செய்துவிட்டு, அடுத்த விமானத்திற்கு பயணச் சீட்டைப் பதிவு செய்யுமாறு அறிவுறுத்திய பிறகு,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [*2017 ஜனவரி 23*

அவர்களை வரவழைத்து, நான் அரை மணி நேரம் அவர்களிடம் பேசி டெல்லி பயணத்திற்குத் தாமதமாக புறப்படும் சூழ்நிலை ஏற்பட்டது. இருந்தாலும், அவர்களைச் சந்தித்தேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த அவசர சட்டம், எதற்காக இப்போது உடனடியாகப் பிறப்பிக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தி, கோரிக்கையாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் நான் எடுத்துக்கூறி, அதற்குரிய வழிவகைகளை காண்பதற்காகத்தான் நான் டெல்லி செல்ல இருக்கிறேன் என்று அவர்களிடம் எடுத்துச் சொன்னபோது, அவர்களும் முழு திருப்தியடைந்து, நீங்கள் சென்று வாருங்கள் என்று என்னை வழியனுப்பினார்கள். நானும் டெல்லி சென்று, அங்கு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்தபோது, அவரும் சில கருத்துகளைச் சொன்னார்கள்; நாங்கள் விவாதித்தோம். தமிழ்நாடு அரசு அவசர சட்டம் ஒன்றினைக் கொண்டுவர வேண்டுமென்றால், நிறைவேற்ற வேண்டுமென்றால், Ordinance கொண்டு வரப்பட வேண்டுமென்றால், அதற்கு மத்திய அரசு உறுதுணையாக இருக்கும் என்ற கருத்தையும் அவர்கள் சொன்னார்கள். அதன் அடிப்படையில், நான் மீண்டும் ஒரு நாள் டெல்லியில் தங்கியிருந்து, அரசினுடைய செயலாளர்களை அங்கேயே அழைத்து, அவர்கள் துணையுடன் அதற்குரிய முன்மொழிவுகளை எல்லாம் தயார் செய்து, அனைத்துத் துறைகளுக்கும், மத்திய உள் துறை, மத்திய சட்டத் துறை, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை ஆகிய துறைகளிடமிருந்தெல்லாம் ஒப்புதலைப் பெற்று, இந்திய குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலையும் பெற்றுதான், இந்த அவசர சட்டம் பிறப்பிக்கப்பட்டது. *(மேசையைத் தட்டும் ஒலி)* நான் டெல்லியிலிருந்து கிளம்புகின்றபோது, நமது பத்திரிகையாளர்களை எல்லாம் சந்தித்து, அதற்குரிய விளக்கத்தைச் சொல்லி, மீண்டும் நான் சென்னைக்கு வந்து இறங்கியவுடன், அதற்குரிய விளக்கமாக, ‘Ordinance போடப்பட்டுவிட்டது. வருகின்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே, அதற்கு மாற்றாக சட்டமுன்வடிவு வரைவு கொண்டு வரப்பட்டு, உரிய சட்டமாக்கப்படும்’ என்ற கருத்தினையும் பதிய வைத்து, அவர்களிடம் எடுத்துச் சொன்னேன்.

மீண்டும் அறவழியில் போராடும் இளைஞர்களை எல்லாம் அழைத்து, இந்த அவசரச் சட்டத்திற்குப் பின்னால் சட்டமன்றம் கூடி, சட்டமுன்வடிவு வரைவு இயற்றப்படும் என்ற விவரங்களை எல்லாம் சொன்னேன். அவர்களும் முழு திருப்தியுடன்



*2017 ஜனவரி 23*] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

சென்றார்கள் என்ற விவரத்தினை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சட்டமுன்வடிவுக்குரிய பொருளை மட்டும் பேசினால், முடித்து விடலாம்.

*பிற்பகல் 5–15*

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோன்ற ஒரு சட்டமுன்வடிவை, திராவிட முன்னேற்றக் கழக அரசு சட்டமாகக் கொண்டு வந்தது. 2009–ல் கொண்டு வரப்பட்ட தமிழ்நாடு ஜல்லிக்கட்டு நெறிமுறைப்படுத்தும் சட்டம், ஜல்லிக்கட்டு எவ்விதத் தடையுமின்றி நடத்திடவே கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டத்தின் விளைவாக கழக ஆட்சி இருந்தவரையிலும், பின்னர் நீங்கள் ஆட்சிக்கு வந்தபிறகும்கூட, 2014 ஆம் ஆண்டு வரை ஜல்லிக்கட்டு எந்தவிதத் தடையுமின்றி நடைபெற்றிருக்கிறது. உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் அனுமதி பெற்று, அந்த நீதிமன்றங்கள் அளித்த பாதுகாப்பு நடைமுறைகளையும் கடைப்பிடித்து ஜல்லிக்கட்டு நடைபெற்றிருக்கிறது. ஆனால், அந்தச் சட்டத்தை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் உச்ச நீதிமன்றம் 7–5–2014 அன்று தீர்ப்பு அளித்தது. அந்தத் தீர்ப்பின் விளைவாக தமிழகத்திலே ஜல்லிக்கட்டுக்குத் தடை ஏற்பட்டது. கடந்த 7–5–2014 ஆம் தேதியன்று உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்ட சில விஷயங்களை மட்டும் இங்கு நான் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன். உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் 27–வது பத்தியில், ‘ஜல்லிக்கட்டு விலங்குகள் நலனுக்கு உகந்தது அல்ல. ஆகவே, இது மிருகவதைத் தடுப்புச் சட்டத்தை மீறுகிறது’ என்று கூறப்பட்டிருக்கிறது. பத்தி 29–ல், ‘ஜல்லிக்கட்டு நடத்த மிருகவதைத் தடுப்புச் சட்டம் எந்த அனுமதியும் வழங்கவில்லை’ என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பத்தி 31–ல், ‘கண்காட்சி, கேளிக்கை, பொழுதுபோக்கு போன்றவற்றிற்கு விலக்கு அளிக்க முடியாது’ என்றும் கூறியிருக்கிறது. பத்தி 34–ல், ‘காளைகளைக் காட்சிப் பொருளாகக் கருதிட முடியாது’ என்றும் கூறியிருக்கிறது. பத்தி 42–ல், ‘இப்போது நடைபெறுவது போன்று, ஜல்லிக்கட்டு எந்தக் காலத்திலும் தமிழகத்தின் கலாச்சாரமாகவோ, பண்பாடாகவோ கடைப்பிடிக்கப்படவில்லை’ என்றே கூறியிருக்கிறது உச்ச நீதிமன்றம். எனவே, உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய குறைகளால் இந்தச் சட்டத்திற்கு ஆபத்து வந்துவிடாமல் பாதுகாக்க

வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது. இந்தச் சட்டமுன்வடிவினை முழுமனதோடு வரவேற்பதோடு, ஜல்லிக்கட்டு நிச்சயமாக நடத்தப்பட வேண்டும், தமிழர்களின் கலாச்சாரமாகவும், பண்பாடாகவும் தொன்றுதொட்டு இருக்கக்கூடிய ஜல்லிக்கட்டுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009–ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது சட்டம் நிறைவேற்றப்பட்டது. சில சட்டங்கள், சில சரத்துகள் மத்திய அரசினுடைய பட்டியலில் இருக்கும். சில சரத்துகள் மாநில அரசினுடைய பட்டியலில் இருக்கும். இரண்டு பட்டியல்களுக்கும் பொதுவானதாக சில பிரிவுகள், சரத்துகள் இருக்கும். ஜல்லிக்கட்டைப் பொறுத்தவரையில், இரண்டு பட்டியல்களிலும் இருக்கின்றது. மத்திய அரசின் சட்டத்தின் மூலமாகவும் செய்யலாம், மாநில அரசின் சட்டத்தின் மூலமாகவும் செய்யலாம். Concurrent list–ல் இருக்கிறது. அப்படி Concurrent list–ல் இருக்கிற சட்டத்தை ஒரு மாநில அரசு கொண்டு வருகின்றபோது, மத்திய அரசினுடைய சட்டத்திற்குட்பட்டு அது இருக்க வேண்டும். அப்படி அந்தச் சட்டம் நிறைவேற்றப்படுமேயானால், அதற்குக் குடியரசுத் தலைவர் அவர்களிடம் ஒப்புதல் வாங்க வேண்டும். Concurrent list–ல் இருக்கிற சட்டத்திற்கு, இங்கு இயற்றப்படுகின்ற சட்டத்திற்கு குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற வேண்டும். நீங்கள் 2009–ல் இயற்றிய அந்தச் சட்டத்திற்கு குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெறவில்லையென்ற காரணத்தினால் அந்தச் சட்டம் செல்லாது என்றுதான் அன்றைக்கு தீர்ப்பு வழங்கப்பட்டு, ஜல்லிக்கட்டு நிறுத்தப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்த அந்தச் சட்டத்தினால்தான் 2014–ல் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும்வரை தமிழகத்திலே எந்தவிதத்





தடையுமின்றி ஜல்லிக்கட்டு நடந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதை நான் இங்கே அழுத்தந்திருத்தமாகப் பதிவு செய்ய விரும்புகிறேன். எனவே, இந்தப் பிரச்சினை நம்முடைய பிரச்சினை மட்டுமல்ல, இது மக்களுடைய பிரச்சினை. தமிழர்களுடைய இரத்தத்தோடு ஒன்றிப் போய் இருக்கக்கூடிய பிரச்சினை. எனவே, இந்தச் சூழ்நிலையில் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மனமுவந்து வரவேற்று, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக அமைந்திருக்கக்கூடிய நம்முடைய அமைச்சரவைக்கு எங்களுடைய வாழ்த்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் எங்கள் கட்சியின் சார்பாக வாழ்த்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பிற்பகல் 5–20

ஜல்லிக்கட்டைப் பொறுத்தமட்டில், அது தமிழகத்தில் தொடர்ந்து நடைபெற்று வரும் மிகப் பெரிய பாரம்பரியமிக்க விளையாட்டு என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். தமிழ்நாட்டிலே அவ்விளையாட்டு இடையிலே நிறுத்தப்பட்டிருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இப்பொழுது அவ்விளையாட்டு தொடர்ந்து நடைபெறுவதற்குரிய ஏற்பாட்டைச் செய்து, மத்திய அரசிடம் கலந்து ஒரு சட்டம் கொண்டு வர வேண்டும் என்று தீர்மானித்து, சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். அதனை இங்குள்ள அனைத்து எதிர்க்கட்சிக்காரர்களும் ஏற்றிருக்கிறார்கள். அந்தவகையிலே, காங்கிரஸ் கட்சியும் இந்தச் சட்டத்தை முழு மனதுடன் வரவேற்கிறது. ஆனால், சில சந்தேகங்கள் இருக்கின்றன. என்னவென்றால், நீங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, துரிதமாக இந்த நடவடிக்கையை ஏன் எடுக்கவில்லை? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் இராமசாமி, விவாதம் இல்லாமல் ஆதரவு தெரிவிக்கும் விஷயத்தை மட்டும் சொல்லி முடியுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்களே பேசுவதற்கு பாயின்டை எடுத்துக் கொடுக்கிறார். முதலில், காளைகள், காட்சிப் பொருள் பட்டியலில்–performing animals list–ல் இல்லை. காளைகள் அந்த list–ல் சேர்க்கப்பட்டது காங்கிரஸ், தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்றுக்கொள்கின்றேன்; இல்லையென்று சொல்லவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அதேநேரத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ஜல்லிக்கட்டு நடைபெறாமல் தடைபட்டு இருந்ததா? இதுதான் என்னுடைய கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி) ஏன், உங்கள் ஆட்சிக் காலத்தில், ஜல்லிக்கட்டு நடைபெறுவதற்கான முயற்சியில் ஈடுபடவில்லை என்பதைத்தான் காங்கிரஸ் கட்சியின் அவைத் தலைவர் கேட்கின்றார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி, நீங்கள் சட்டத்தை வரவேற்றுப் பேசுகிறேன் என்று கூறி, இரண்டு, மூன்று நிமிடங்கள் மட்டும் பேசுங்கள். இன்னொரு சந்தர்ப்பத்தில் இவை குறித்தெல்லாம் பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014 ஆம் ஆண்டு வரை ஜல்லிக்கட்டு தமிழகத்திலே நடைபெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நாங்கள் இயற்றிய சட்டத்திற்குப் பிறகு ஜல்லிக்கட்டு தடைபடவில்லை என்ற கருத்தினை இங்கே பதிய வைத்தார்கள். ஒரு தவறான சட்டத்தை இயற்றிவிட்டு, ஜல்லிக்கட்டு தடைபடவில்லை என்று அதை பெருமைக்குரிய விஷயமாகப்





பேசுவதே தவறு. (மேசையைத் தட்டும் ஒலி) பெருமைக்குரிய விஷயமாகப் பேசுவது தவறு. அது தவறான சட்டம் என்று சில அமைப்புகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். தமிழ்நாடு அரசு 2009 ஆம் ஆண்டில். . . (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். 2009 ஆம் ஆண்டு தி.மு.க. அரசு கொண்டு வந்த சட்டம், குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறாமல் இயற்றப்பட்டிருக்கிறது. இயற்றப்பட்ட அந்தச் சட்டத்திற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற வேண்டும். ஒரு சட்டத்திற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற வேண்டும் என்றால், மத்திய அரசினுடைய சில விதிமுறைகளையெல்லாம் பின்பற்றி இயற்றப்பட வேண்டும். அந்த விதிமுறைகளையெல்லாம் பின்பற்றி, அந்தச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறதா என்பதனை, குடியரசுத் தலைவர் ஆய்ந்து, கூர்ந்து, பார்த்து, ஆராய்ந்த பிறகுதான் கையொப்பம் இடுவார். அந்த வகையில், குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறாமல் அந்தச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது என்ற அடிப்படையில்தான், அந்தச் சட்டம் செல்லாது என்று உச்ச நீதிமன்றத்தில் தடையாணை பெறப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி, உரையை முடியுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜல்லிக்கட்டு தமிழகத்திலே அமைதியாக நடைபெற வேண்டும் என்பதுதான் எங்களுடைய நோக்கமேயொழிய. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். திரு. இராமசாமி, நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** இப்பொழுது ஆட்சிப் பொறுப்பில் புதிதாக நீங்கள் பொறுப்பேற்றிருக்கிறீர்கள். (குறுக்கீடு) உங்களிடம் நாங்கள் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறோம். நீங்கள் செய்யக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். ஆகவே, இந்த ஜல்லிக்கட்டுப் போட்டி தொடர்ந்து நடைபெற வேண்டும்; அதற்கு உரிய சட்டத் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் உங்களிடம் வைக்கின்றோம். (குறுக்கீடுகள்)

[2017 ஜனவரி 23

பிற்பகல் 5–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) அந்தப் பக்கமும் சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர் பேசி முடிக்கட்டும். உட்காருங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** ஜல்லிக்கட்டு என்பது மக்களுடன் ஒன்றாகப் பின்னிப் பிணைந்திருக்கிறது. சட்டங்களால் அதைத் தடுத்து நிறுத்த முடியாது என்று நான் கருதுகிறேன். சட்டங்களுக்கு அப்பாற்பட்டு நிறைவேற்றித்தர நீங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள். அதை நீங்கள் செய்து தர வேண்டும். காட்சிப் பொருள் பட்டியலிலிருந்து காளை மாடுகளை நீக்க வேண்டும். அது எந்த அரசு இருக்கும்போது வந்தது என்றெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் ஏற்றுக்கொள்கிறேன். இல்லையென்று சொல்லவில்லை, சரிதான். ஏற்றுக்கொள்கிறேன். இப்போது நீங்கள் பொறுப்பிலே இருக்கும்போது அந்தப் பட்டியலில் இருந்து அதை எடுக்க வேண்டும். அதற்கு இந்தச் சட்டம் உதவியாக இருக்குமேயொழிய இப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வாக இருக்கும் என்று நான் கருதவில்லை. ஜல்லிக்கட்டு நடத்த வேண்டும் என்பதிலே நாங்கள் எல்லோரும் உங்களுடன் ஒற்றுமையாக இருக்கிறோம். அதற்கு நாங்கள் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். நீங்கள் உரிய நடவடிக்கையை எடுங்கள். ** உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர். (குறுக்கீடு)

**திரு. கரி. இராமசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. கடைசியாக திரு. இராமசாமி பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், நீங்கள் சொல்லுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2017 ஜனவரி 23]

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2017 ஆம் ஆண்டு விலங்குகள் வதைத் தடுப்பு (தமிழ்நாடு திருத்தம்) சட்டமுன்வடிவை இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் சார்பாக வரவேற்கின்றேன். டெல்லி வரை சென்று பிரதமர் மற்றும் சட்ட வல்லுனர்களை சந்தித்து, தமிழகத்தின் கலாச்சாரப் பெருமையை நிலை நிறுத்திட, ஜல்லிக்கட்டு நடைபெறுவதற்குண்டான பணிகளை ஆற்றியிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், இந்த அரசாங்கத்திற்கும் எங்களின் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அறம் சார்ந்த முறையில் ‘தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா’ என்பதை நிலைநிறுத்த அறவழியில் போராடியிருக்கும் மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்களுக்கும் இந்த நல்ல நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஜல்லிக்கட்டுப் போட்டி எந்த இடையூறும் இல்லாமல் வருடா வருடம் நடத்திடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்திட இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குக் கடுமையான அழுத்தத்தைக் கொடுத்து, அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்பதையும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் சார்பாக கேட்டுக்கொள்கின்றேன். ஜல்லிக்கட்டு வீர விளையாட்டை எப்படியும் தமிழகத்தில் நடத்தியே தீர வேண்டும் என்ற இலட்சியத் துடிப்போடு அதற்கான போராட்டக் களத்தை முதலில் துவக்கிய கழகத்தின் செயல் தலைவராக மட்டுமில்லாமல் தமிழகத்தின் செயல் துடிப்பான கலாச்சாரப் பண்பாடு நிறைவேற துணை நின்றிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் தளபதியார் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்தச் சட்டமுன்வடிவை இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் சார்பாக வரவேற்கிறேன். நடவடிக்கைகளுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி.

***திரு. எம். தமிமுன் அன்சாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்களே, அவர்கள் தலைமையிலான அமைச்சர்களே, உங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துகளை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். ஒட்டுமொத்த உலகத் தமிழினமும்

[திரு. எம். தமிமுன் அன்சாரி] [*2017 ஜனவரி 23*

ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த ஒரு மிக முக்கியமான சட்டமுன்வடிவைக் கொண்டு வந்ததற்காக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசை மனதாரப் பாராட்டுகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 5–30*

இனம் காக்கப்பட வேண்டும், மொழி உணர்வுகள் காக்கப்பட வேண்டும், இனத்தின் கலாச்சாரம் காக்கப்பட வேண்டும் என்பதற்காக இதுவரை இல்லாத அளவுக்கு தமிழகத்திலே மாணவர்களும் இளைஞர்களும் ஒருங்கிணைந்து களத்திலே இறங்கி, ஓர் அறப்போராட்டத்தை நடத்தி இருக்கிறார்கள். அதற்கு உலகம் முழுவதும் வாழக்கூடிய தமிழர்கள் தாங்கள் வாழும் நாடுகளிலே, களத்திலே இறங்கி, போராடி, ஆதரவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

ஜல்லிக்கட்டு என்பது ஐந்தாயிரம் ஆண்டுகால தொன்மையான தமிழினத்தினுடைய பண்பாடுகளில் ஒன்றாக இருக்கும் நிலையிலே, டெல்லியிலே இருக்கக்கூடியவர்கள் அதைப் புரிந்துகொள்ளாமல்போன காரணத்தினாலே, தமிழகத்திலே ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டது. அந்தக் கொந்தளிப்பை சரியான முறையிலே எதிர்கொண்டு, அவர்களுடைய விருப்பங்களை நிறைவேற்றும் பொருட்டாக, இன்றையதினம் இந்தச் சட்டத்தை நாம் நிறைவேற்ற இருக்கின்றோம். ஜல்லிக்கட்டு என்பது வெவ்வேறு பெயர்களிலே உலகம் முழுக்க நடந்து கொண்டிருக்கிறது. மெக்சிகோவிலே நடக்கிறது, தாய்லாந்திலே நடக்கிறது, நியுசிலாந்திலே நடக்கிறது, ஸ்பெயினிலே நடக்கிறது. ஆனால், தமிழ்நாட்டிலே நடக்கக்கூடிய ஜல்லிக்கட்டு என்பது முற்றிலும் மாறுபட்டது. அங்கெல்லாம் போட்டி முடிந்தவுடன் காளைகளைக் கொன்று விடுவார்கள். ஆனால், தமிழ்நாட்டில்தான் போட்டி முடிந்தவுடன் காளைகளுக்கு மரியாதை செய்து சிறப்பிக்கக்கூடிய ஒரு பெரிய பண்பாட்டைத் தமிழர்கள் போற்றிப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* எனவேதான், ஜல்லிக்கட்டு நடத்தப்பட வேண்டுமென்று தமிழ்நாட்டு மக்கள் ஒரே அணியிலே சிந்தித்தார்கள். அவர்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு, இன்றையதினம் இந்த அருமையான சட்டமுன்வடிவை நிறைவேற்ற இருப்பதற்காக உங்கள் அத்தனைபேருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். PETA, Blue Cross போன்ற அமைப்புகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும். அவற்றைத் தடை



*2017 ஜனவரி 23*] [திரு. எம். தமிமுன் அன்சாரி]

செய்வதற்கான வாய்ப்புகள் இருந்தால், அதையும் முன்னெடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு, நீங்கள் பேசுகிறீர்களா? (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.*

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் முழுக்க பரவி வாழ்கிற ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகத்தின் பெரும் நம்பிக்கையைப் பெற்றிருக்கிற அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக தாய் தமிழ்ச் சமூகம் எந்த உரிமைகளையெல்லாம் கட்டிக்காத்து, அதைத் தங்குதடையின்றி அனுபவித்து வருகிறதோ, அந்த உரிமைகளையெல்லாம் ஏதேனும் சில காலகட்டங்களிலே பல்வேறு நெருக்கடிகளிலே தமிழ்நாட்டு மக்களினுடைய பாரம்பரிய உரிமைகளுக்குத் தடை வந்தபொழுதெல்லாம் அந்த உரிமைகளை மீட்டெடுத்து, தமிழர்களின் நெஞ்சம் எல்லாம் நிறைந்திருந்த ஒப்பற்ற தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களினுடைய ஆற்று நீர் உரிமையை மீட்டெடுத்துத் தந்தார்கள், கச்சத் தீவு உரிமைகளுக்காகத் தொடர்ந்து சட்டமன்றத்திலே தீர்மானம் இயற்றி, உச்ச நீதிமன்றம் சென்று போராடி நில உரிமையை மீட்டெடுத்த தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு.

தமிழர்கள் வேட்டி அணிந்துகொண்டு தமிழ்நாட்டின் தலைநகரத்திலுள்ள மனமகிழ் மன்றங்களுக்குள்ளே செல்ல முடியாது என்ற சட்டம், சுதந்திரத்திற்கு முன்பும், சுதந்திரம் பெற்று 67 ஆண்டுகளாக நடைமுறையிலே இருந்ததை, இதே சட்டமன்றத்திலே மாற்றிக் காட்டி, தமிழர்கள் வேட்டி அணிந்துகொண்டு பாரம்பரிய உடையோடு மனமகிழ் மன்றங்களுக்குள்ளே செல்லலாம் என்கின்ற அனுமதியை ஒரே நாளிலே பெற்றுத் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களினுடைய மானம் காத்த அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படித்தான் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக என் தாய் தமிழ்ச் சமூகம் உயிருக்கு

உயிராக நேசித்து விளையாடி வந்த மஞ்சுவிரட்டு, ஜல்லிக்கட்டு, ஏறு தழுவுதல் போன்ற விளையாட்டுகளை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து பாதுகாப்பதற்கு 2006 ஆம் ஆண்டிலிருந்து 10 ஆண்டுகளாகப் போராடியது. (மேசையைத் தட்டும் ஒலி) எந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தாலும், எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தாலும், அதிலே முடியளவும் தடை ஏற்படுத்திட முடியாத அளவுக்கு அதனை மிக நேர்த்தியாக வடிவமைக்கிற ஆற்றல் பெற்ற அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) இப்போதும் இந்த ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு, ஏறு தழுவுதல் போன்ற விளையாட்டுகளைப் பாதுகாத்திட தமிழ்நாட்டிலுள்ள இலட்சக்கணக்கான மாணவர்களுடைய, இளைஞர்களுடைய, மக்களினுடைய உணர்வுகளுக்கு மதிப்பு அளித்து, இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் ஐயா அவர்கள் டெல்லி சென்று அவசரச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார். அதனைத் தொடர்ந்து 2017 ஆம் ஆண்டு ஜல்லிக்கட்டு தொடர்பான திருத்தச் சட்டத்தை, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க திருத்தச் சட்டத்தை தமிழ்நாட்டில் இனி தமிழ்ச் சமூகம் இருக்கின்ற வரையில் வரலாறு நெடுகிலும் இதன் பயனை அனுபவிப்பதற்குரிய வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றத்திலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் ஐயா அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, மாண்புமிகு முதல்வர் ஐயா அவர்களுடைய அரசு கொண்டு வந்திருக்கிற 2017 ஆம் ஆண்டு விலங்குகள் வதைத் தடுப்புச் சட்டமுன்வடிவை நாங்கள் மனமுவந்து, நெஞ்சார்ந்து, உலகம் முழுக்க பரவி வாழ்கிற ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகத்தின் சார்பாக, ஆதரித்து வரவேற்கிறோம். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 5–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சே. கருணாஸ், பேசுங்கள். (குறுக்கீடு) திருமதி எஸ். விஜயதரணி, உட்காருங்கள். திரு. கருணாஸ், நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) சட்டமுன்வடிவு குறித்து





விரைவில் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சியின் சார்பாக ஒருவர்தான் பேச அனுமதிக்கப்பட்டார்; அவர் பேசி முடித்துவிட்டார். (குறுக்கீடு) திருமதி விஜயதரணி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை. (குறுக்கீடு) பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற கட்சியின் சார்பாக எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் மட்டும்தான் பேசியிருக்கிறார். நீங்கள் 8 பேர் இருந்துகொண்டு, 2 பேர் பேச வேண்டுமென்றால் எப்படி? (குறுக்கீடு) பரவாயில்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. கருணாஸ், நீங்கள் பேசுங்கள்.

**திரு. சே. கருணாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சபையோர்களே, அவையோர்களே, மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பெருமக்களே! (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன், உட்காருங்கள்.

**திரு. சே. கருணாஸ்:** இதே இடத்தில், நான் திருவாடனை தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) எனக்குத் தெரியும், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் யாரைப் பேச அனுமதிக்க வேண்டுமென்று எனக்குத் தெரியும், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. கருணாஸ் அவர்களைப் பேச நான் அழைத்திருக்கிறேன்; அவர் பேசுவார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அமைதியாக உட்காருங்கள். திரு. சே. கருணாஸ், பேசி முடியுங்கள். இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்கிறீர்களா என்பதை ஒரே வார்த்தையில் சொல்லி முடியுங்கள்.

**திரு. சே. கருணாஸ்:** நான் திருவாடனை தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, என்னுடைய கன்னிப் பேச்சிலே, இதே சட்டமன்றத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முன்னிலையில் ஜல்லிக்கட்டின் மாண்பையும், ஜல்லிக்கட்டு தமிழர்களின் கலாச்சாரத்தினுடைய வெளிப்பாடு, 2,500 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த மண்ணிலே மானத்தோடும், மொழியோடும், கலாச்சாரத்தோடும் வளர்ந்து வந்த ஒரு கலை. . . (குறுக்கீடு)

[2017 ஜனவரி 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். இந்த நேரத்தில்கூட உட்கார மாட்டேன் என்கிறீர்களே? (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

**திரு. சே. கருணாஸ்:** அந்தக் கலையை, அந்த ஜல்லிக்கட்டை உங்களால் மட்டும்தான் சட்டரீதியாகப் பெற்றுத் தர முடியும். அதை நீங்கள் பெற்றுத் தர வேண்டுமென்று, மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே வற்புறுத்தினேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) பரவாயில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும், அப்புறம் உங்களுக்குச் சொல்கிறேன், உட்காருங்கள்.

**திரு. சே. கருணாஸ்:** இன்றைக்கு ஒட்டுமொத்தத் தமிழர்களுடைய உணர்வுகளின் பிரதிபலிப்பை உணர்ந்து, ஒட்டுமொத்த மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, இந்தச் சட்டமுன்வடிவை உடனடியாக இந்தச் சட்டமன்றத்தில் நிறைவேற்றுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து, மற்ற அதிகாரிகளிடத்திலேயும் ஆலோசனை நடத்தி, ஒட்டுமொத்த மாணவச் சமூகத்தினுடைய, இளைஞர் சமூகத்தினுடைய, தமிழர்களுடைய உணர்வுகளைப் புரிந்து, உடனடியாக இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருப்பதை என்னுடைய முக்குலத்தோர் புலிப்படையின் சார்பாக மனமார வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திருமதி விஜயதரணி, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சியின் சார்பாக, உங்களுடைய சட்டமன்றக் குழுத் தலைவர் திரு. கரி. இராமசாமி அவர்கள் இந்தச் சட்டத்தை வரவேற்றுப் பேசி அமர்ந்துவிட்டார். நீங்கள் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) பரவாயில்லை, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) ஒரு கருத்தையும் நான் allow செய்யவில்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் உங்களை அனுமதிக்கவில்லை, உட்காருங்கள்; உங்கள் கட்சிக்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். (குறுக்கீடு) உங்கள் சட்டமன்றக் குழுத் தலைவர் பேசிவிட்டார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இன்றைக்கு முக்கியமான சட்டமுன்வடிவை நிறைவேற்றுகிற நேரத்தில், இப்படி அவையை நடத்தவிடாமல் செய்கிறீர்களே! இது என்ன நியாயம்? (குறுக்கீடு) திருமதி விஜயதரணி, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுவது எதுவும் அவைக்குறிப்பில் வராது. (குறுக்கீடு) நீங்கள் பேசுவது எதுவும் அவைக்குறிப்பில் வராது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் பதிலைச் சொல்லுங்கள்.



2017 ஜனவரி 23] [பேரவைத் தலைவர்]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களின் பண்பாட்டுச் சின்னமாக விளங்கும் ஜல்லிக்கட்டு, 2006 ஆம் ஆண்டு முதலே பல்வேறு சோதனைகளை சந்தித்துள்ளது. உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் ஆகியவை அவ்வப்போது வழங்கிய பல்வேறு இடைக்கால உத்தரவுகளின்படியே ஜல்லிக்கட்டு நடைபெற்று வந்தது. இந்த நிலையில், 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் பிராணிகள் நலப் பிரிவு, ஜல்லிக்கட்டு நிகழ்வு, பழக்கப்பட்ட விலங்கின் செயலைக் காட்சிப்படுத்துவது எனக் குறிப்பிட்டு, எனவே அவை தடை செய்யப்பட வேண்டும் எனப் பரிந்துரைத்து, பிராணிகளுக்கு இழைக்கப்படும் தீங்கினைத் தடுத்தல் சட்டத்தின் பிரிவு 22–ன்கீழ், புலிகள், கரடிகள் ஆகியவற்றுடன் காளையையும் சேர்க்க வேண்டுமெனப் பரிந்துரைத்தது. இதனடிப்படையில், தி.மு.க. அங்கம் வகித்த காங்கிரஸ் கூட்டணி அரசு, தனது 11–7–2011 ஆம் நாளிட்ட அறிவிக்கையில் காளையையும் இந்தப் பட்டியலில் சேர்த்து அறிவிக்கை ஒன்றை வெளியிட்டது.

பிற்பகல் 5–40

உச்ச நீதிமன்றம், மத்திய அரசால் 11–7–2011 அன்று வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, 7–5–2014 அன்று இறுதி உத்தரவை பிறப்பித்தது. அதன்படி, தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் நடத்தவும், மகாராஷ்டிராவில் காளை மாட்டுப் பந்தயத்தை நடத்தவும் முழுமையான தடை பிறப்பிக்கப்பட்டது. மேலும், தமிழ்நாடு ஜல்லிக்கட்டு நெறிமுறைச் சட்டம் 2009, இந்திய பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டத்திற்கு முரணாக அமைந்துள்ளதால், இது மத்திய சட்டத்திற்கு எதிரானது என உச்ச நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது. இந்த உச்ச நீதிமன்ற

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 ஜனவரி 23

ஆணைக்கு எதிராக தமிழ்நாடு அரசால் தாக்கல் செய்யப்பட்ட மறு ஆய்வு மனு உச்ச நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் காரணமாக, மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகம் 7–1–2016 அன்று ஓர் அறிவிக்கையை வெளியிட்டு ஜல்லிக்கட்டு நிகழ்வுக்கு வழி செய்தது. ஆனால், பல அமைப்புகள் இதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து, தடை உத்தரவைப் பெற்றுவிட்டன. இந்த வழக்கின் விசாரணையை உச்ச நீதிமன்றம் முடித்துக்கொண்டது. இறுதித் தீர்ப்பு இன்னும் வழங்கப்படவில்லை. எனவே, ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு ஏதுவாக, அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட வேண்டும் என மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நான் வலியுறுத்தி வந்தேன். 19–1–2017 அன்று புதுடில்லியில் அவரது இல்லத்தில் சந்தித்து, இதுபற்றி விரிவாக விவாதித்தபோது, மத்திய அரசின் அறிவிக்கை தொடர்பாக உச்ச நீதிமன்ற வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளதால், மாநில அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு உறுதுணையாக இருக்கும் என்ற வாக்குறுதியை அளித்தார்கள்.

ஜல்லிக்கட்டு நடைபெற மாநில அரசு உடனடியாக சட்டபூர்வமாக என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை சட்ட வல்லுநர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகளுடன் ஆலோசித்து, மத்திய அரசின் மிருக வதைத் தடுப்புச் சட்டத்தில், மாநில அளவிலான திருத்தங்கள் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

மத்திய அரசின் சட்டத்தில் உள்ள ஷரத்துகளுக்கு முரணாக, மாநில அரசு மாநிலத்திற்கான சட்டத் திருத்தம் இயற்ற இயலும். எனினும், அந்தச் சட்டத்திற்கு மத்திய அரசின் பரிந்துரையுடன், மேதகு இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டத் தொடர் 23–1–2017 அன்றுதான் துவங்குகிறது என்பதாலும், சாதாரணமாக சட்டமுன்வடிவுகளுக்கான சட்டமன்ற ஒப்புதல் கூட்டத் தொடரின் கடைசி நாளிலேயே பெறப்படும் என்பதாலும், அதன் பின்னர், மாண்புமிகு மாநில ஆளுநர் மூலமாக மேதகு இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்பதாலும், இவை அனைத்திற்கும் காலதாமதம் ஏற்படும் என்பதால், அவசரச்



2017 ஜனவரி 23] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

சட்டம் பிறப்பிக்க முடிவெடுக்கப்பட்டு, அவ்வாறே அவசரச் சட்டம் 21–1–2017 அன்று பிறப்பிக்கப்பட்டது.

இந்த அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதன் காரணமாக, ஜல்லிக்கட்டு நடத்தப்படுவதற்கான அனைத்துத் தடைகளும் நீக்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) ஜல்லிக்கட்டு நிகழ்வு என்பது ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை பல்வேறு இடங்களில் அந்தந்த ஊர் மக்களால் நடத்தப்படுவதாகும். ஜல்லிக்கட்டு நிகழ்வினை 21–1–2017 முதல் நடத்துவதற்கு எந்தவிதத் தடையும் இல்லை. எனவே, ஜல்லிக்கட்டு நிகழ்வு நடத்த விரும்பும் ஊர் மக்கள், அந்தப் பெருமக்கள் தாங்கள் விரும்பும் நாளில் அதனை நடத்திக்கொள்ள இயலும்.

பிற்பகல் 5–45

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 213–வது ஷரத்தில், சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறாத காலத்தில் அவசரச் சட்டங்களை இயற்றுவதற்கு ஆளுநருக்கு உள்ள அதிகாரம் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட வேண்டிய சட்டம் பற்றிய பொருளாக இருப்பின், இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்றே ஆளுநர் அவசரச் சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க முடியும். அந்த வகையில், அனைத்து சட்டபூர்வ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, இந்த அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஜல்லிக்கட்டு நடத்திட சரியான நடைமுறை தற்போது பின்பற்றப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டு தமிழக அரசால் ஜல்லிக்கட்டு நடத்திட இயற்றப்பட்ட சட்டம் மத்திய அரசின் மிருக வதைத் தடுப்புச் சட்டத்திற்கு முரணானது என உச்ச நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது. எனவே, ஜல்லிக்கட்டு நடத்திட சரியான சட்ட நடவடிக்கை என்பது மத்திய அரசின் 1960 ஆம் ஆண்டைய மிருக வதை தடுப்புச் சட்டத்திற்குத் தேவையான சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருவதுதான். இந்தச் சட்டத்தில் உள்ள சில ஷரத்துகளுக்கு சட்டத் திருத்தம் மத்திய அரசாலும் கொண்டு வர முடியும், மாநில அரசாலும் கொண்டு வர முடியும். மத்திய சட்டத்திற்குத் திருத்தங்களை மத்திய அரசு கொண்டு வந்தால் அது நாடாளுமன்றத்தில் தாக்கல்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 ஜனவரி 23

செய்யப்பட்டு, இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். அத்தகைய சட்டத் திருத்தம் அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவான அல்லது குறிப்பிட்ட மாநிலங்களுக்கான சட்டத் திருத்தமாக இருக்கும். மாநிலங்கள் தங்கள் தேவைக்கு ஏற்ப மத்திய அரசின் சட்ட ஷரத்துகளுக்கு மாறுபாடான சட்டத் திருத்தங்களைக் கொண்டு வரவும் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் வழிவகை செய்கிறது. ஆனால், மத்திய சட்டத்திற்கு மாநில அளவில் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படும்போது, இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

தற்போது அவசரச் சட்டம் வாயிலாக 1960 ஆம் ஆண்டைய மிருக வதை தடுப்புச் சட்டத்திற்கு சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. அந்தச் சட்டத்தில், அதாவது 1960 ஆம் ஆண்டைய சட்டத்தில் 2, 3, 11, 22, 27 மற்றும் 28 ஆகிய ஷரத்துகளுக்குத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

அவசரச் சட்டத்திற்கு மாற்றாக சட்டமன்ற ஒப்புதலுடன் இந்த தமிழ்நாடு திருத்தங்கள் உடனடியாகக் கொண்டு வரப்பட வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில்தான் இன்றே இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பதை இங்கே தெளிவாக தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, ஜல்லிக்கட்டிற்கு தடை வந்த போதெல்லாம் அதனைத் தடுத்து நிறுத்தி சட்டத்தின் மூலமாக ஜல்லிக்கட்டு நடத்தப்பட வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டுதான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றம் வரை சென்று போராடி வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் நடைபெறுகின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அந்த வேலையை நிறைவாக இப்பொழுது இளைஞர்கள், மாணவர்கள், பொது மக்களுக்கு செய்து தந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2017 ஜனவரி 23] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 8 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு விலங்குகள் வதைத் தடுப்பு (தமிழ்நாடு திருத்தம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2017) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஒருமனதாக ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (24–1–2017) செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 5–50 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.